SRI LANKA

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் I பரீட்சை – ஜனவரி 2025

## Level I Examination – January 2025)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (104) வணிகச் சூழல் (BEN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**
இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 540, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

மட்டம் I பரீட்சை – ஜனவரி 2025

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**1.1** (3)
**1.2** (1)
**1.3** (2)
**1.4** (4)
**1.5** (1)
**1.6** (2)
**1.7** (4)
**1.8** (1)
**1.9** (3)
**1.10** (1)

*(02 புள்ளி வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)*

**1.11** சரியானது

**1.12** சரியானது

**1.13** தவறானது

**1.14** சரியானது

**1.15** சரியானது

*(02 புள்ளி வீதம், மொத்தம் 10 புள்ளிகள்)*

**1.16.** • சமூக முயற்சியாண்மை

- உள்ளக முயற்சியாண்மை
- பசுமை முயற்சியாண்மை
- பூகோள முயற்சியாண்மை
- பெண் முயற்சியாண்மை
- தொழிநுட்பம் சார்ந்த தீர்வுகள்

***(இதனை ஒத்த ஏற்கத்தக்க விடைகள் புள்ளி வழுங்கலுக்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)***

***(02 புள்ளிகள்)***

1.17
- பொருளாதார மந்தநிலைகள்
- ஒழுங்குமுறை மாற்றங்கள்
- சந்தைப் போட்டி
- வழங்கல் சங்கிலி இடையூறுகள்
- முகாமையின் குறைபாடுகள்
- தொழிற்பாட்டு செயன்முறையிலான சிக்கல்கள்
- வழங்குனர் வலையமைப்பிற்கு இடையே ஒருங்கிணைப்பின்மை
- குறைந்த சேவைத் தரம்
- நிதி ஆதரவைப் பெற நிதி நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமை
- முக்கிய வாடிக்கையாளர் அல்லது வழங்குனர் முறிவடைதல்
- வரிவிதிப்பு தொடர்பான அரசாங்கக் கொள்கைகளில் மாற்றங்கள்
- சர்வதேச நிறுவனங்களின் ஆதரவு இல்லாமை (உ-ம்: IMF)
- நாட்டினுள்ளான மற்றும் நாடுகளிடையிலான மோதல்கள்
- நிதி மூலதனத்தின் பற்றாக்குறை

***(இதனை ஒத்த ஏற்கத்தக்க விடைகள் புள்ளி வழுங்கலுக்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)***

***(02 புள்ளிகள்)***

1.18 முறையான நிறுவன அமைப்பு கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டிருக்கும், முறைசாரா அமைப்பு தனிப்பட்ட உறவுகள் மற்றும் வலையமைப்புக்களில் தங்கியிருக்கும். அதேசமயம் ஒரு முறைசாரா அமைப்பு என்பது தனிநபரின் சமூக செயற்பாட்டின் விளைவாக உருவாக்கப்பட்ட அல்லது முறையான கட்டமைப்பு இல்லாமல் உருவாக்கப்பட்ட மக்கள் குழுவாகும்.

***(02 புள்ளிகள்)***

aat SRI LANKA

1.19 • பங்குகள்

• தொகுதிக்கடன் பத்திரங்கள்

• திறைசேரி முறிகள்

• கூட்டுவணிக முறிகள்

*(02 புள்ளிகள்)*

1.20 காசோலையின் திகதியானது எதிர்காலத் திகதியொன்றாக இருக்கும் வகையில் வரையப்படும் காசோலை பிற் திகதியிடப்பட்ட காசோலை என அழைக்கப்படும்.

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*

***பிரிவு A முடிவு***

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01 – வணிக நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய எண்ணக்கருக்கள்***
***பகுதி V - வணிக நிறுவனங்களுக்கான அறிமுகம்***

**(a) ஒரு தனியுடமை நிறுவனத்தின் பிரதிகூலங்கள்:**

*(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு, போதுமான விளக்கத்துடன் கூடிய இரண்டு சரியான விடைகள். இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்கப்படுவதற்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)*

1. **வரையறையற்ற பொறுப்பு**: ஒரு தனியுடமை வணிகத்தின் உரிமையாளர் அனைத்து வணிகக் கடன்களுக்கும் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார். இதன் விளைவாக, வணிகம் நட்டத்தை சந்திக்கும் போது, வணிகத்தில் அவர் முதலீடு செய்த தொகைக்கு மேலதிகமாக, அவரது தனிப்பட்ட சொத்துக்களையும் இழக்க நேரிடும்.
2. **வரையறுக்கப்பட்ட மூலதனம்**: தனியுடமை வணிகங்கள் பொதுவாக ஒரு தனிநபரால் மாத்திரம் நிதியளிக்கப்படுவதால், அவை வரையறுக்கப்பட்ட அளவிலான மூலதனத்தையே கொண்டிருக்கும். தனிப்பட்ட உரிமையாளரின் கடன் வாங்கும் இயலுமை குறைவாக இருக்கலாம். வணிகத்துக்கான நிதியீட்டம் அவரது தனிப்பட்ட சேமிப்பு மற்றும் கடன்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருக்கும்.
3. **தொடர்ச்சித்தன்மை இல்லாமை**: வணிகம் உரிமையாளரின் மரணம் அல்லது ஓய்வுக்குப் பின்னர் தொடர்ந்தும் தொழிற்படுவதில்லை. உரிமையாளரே வணிகமாகக் கருதப்படுவதால், உரிமையாளர் வணிகத்தை நிறுத்தும்போது அல்லது அவர் தொடர இயலாமை அல்லது இறப்பு ஏற்பட்டால், வணிகமும் நிறுத்தப்படும்.
4. **வணிகத் தீர்மானங்களின் வெற்றி உரிமையாளரின் முகாமை மற்றும் முயற்சியாண்மை இயலுமைகளில் தங்கியிருக்கும்:** தனியுடமை வணிகத்தின் வெற்றி பெரும்பாலும் உரிமையாளரை சார்ந்ததாகும். இத்தகைய உரிமையாளர்களுக்கு வணிகத்தின் அனைத்து அம்சங்களிலும் எப்போதும் திறன்கள் மற்றும் திறமைகள் இருப்பதில்லை. வணிக நடைமுறைகள் குறித்த உரிமையாளர்களின் அறிவு காணப்படாமை வணிக தோல்விக்கு வழிவகுக்கும்.
5. **உரிமையாளர் மட்டுமே இழப்பைத் தாங்கிக் கொள்ள வேண்டும்**: ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் உரிமையாளர் நேரடியாகப் பொறுப்பாவார்.
6. **சட்ட ஆளுமை இல்லாமை**: சட்டத்தின் கண்ணில், வணிகம் என்பது உரிமையாளராகும். அதாவது, வணிகத்திற்கு உரிமையாளரிடமிருந்து தனித்தனியாக எந்த சட்ட அடையாளமும் கிடைப்பதில்லை.
7. **திறமையான ஊழியர்களை ஈர்ப்பது கடினம்**: தொடர்ந்தியங்கும் தன்மை பிரச்சினைகள் மற்றும் ஊழியர்கள் அதிக ஊதியம் மற்றும் சம்பளம் செலுத்த இயலாமை ஆகியவை தகுதிவாய்ந்த மற்றும் திறமையான ஊழியர்களை ஆட்சேர்ப்பதைக் கடினமாக்குகின்றன.
8. **வணிக விரிவாக்கத்தின்போது முகாமை செய்வதிலான சிரமம்**: வணிகம் வளர்ச்சி அடையும்போது, ஊழியர் எண்ணிக்கை மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் விரிவாக்கத்தினால், உரிமையாளரால் வணிகத்தை சொந்தமாக கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். *(04 புள்ளிகள்)*

**(b) ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியைக் கூட்டிணைப்பதற்குத் தேவையான ஆவணங்கள்:**

***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு, மூன்று சரியான விடைகள் போதுமானவை, விளக்கமளித்தல் அவசியமானதல்ல. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்கலுக்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)***

(i) புறவிதி.

(ii) கம்பனியின் பெயர்ப் பிரகடனம்

(iii) இயக்குநர் விபரங்கள் / ஆரம்ப இயக்குநர்களின் ஒப்புதல்

(iv) ஆரம்ப செயலாளரின் ஒப்புதல்

***(03 புள்ளிகள்)***

**(c) ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியின் குணவியல்புகள்:**

***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு, போதுமான விளக்கத்துடன் கூடிய இரண்டு சரியான விடைகள் போதுமானவை. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்கலுக்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)***

| | | |
|---|---|---|
| 1 | உரிமை | பங்குதாரர்களே உரிமையாளர்கள் ஆவர். |
| 2 | மூலதனம் | பங்குகளை வழங்கிப் பெறப்படும். பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்குவது தடுக்கப்பட்டுள்ளதுடன், சுயாதீனமானக் பங்குகளை உரிமைமாற்ற முடியாது. |
| 3 | பங்குதாரர் | குறைந்தபட்சம் 01, அதிகபட்சம் 50. |
| 4 | முகாமை | இயக்குநர் சபையினால் நிர்வகிக்கப்படும். குறைந்தபட்சம் 01 மற்றும் அதிகபட்ச வரம்பு இல்லை. |
| 5 | கட்டுப்பாடு | ஆளுகையானது சட்டநியதிக் கட்டுப்பாடு மற்றும் பங்குதாரர்களின் கூட்டுக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. |
| 6 | சட்ட ஆளுமை | சட்ட ஆளுமை உள்ளது. |
| 7 | பொறுப்பு | நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. |
| 8 | தொடர்ச்சித்தன்மை | தொடர்ந்தியங்கும் தன்மை பிரச்சினைகள் காணப்படாது. |
| 9 | கூட்டிணைப்பு | கம்பனிகள் சட்டத்தின்படி கூட்டிணைத்தல் கட்டாயமாகும். |
| 10 | கணக்கியல் மற்றும் கணக்காய்வு | கணக்கியல் மற்றும் கணக்காய்வு கட்டாயமாகும். ஆனால் கணக்குகளின் அறிக்கைகள் கம்பனிப் பதிவாளரால் கோரப்பட்டால் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 11 | வரி செலுத்துகை | வரிகள் கம்பனியின் பெயரில் செலுத்தப்பட வேண்டும். |
| 12 | கலைப்பு | கலைப்பு தன்னிச்சையாக, நீதிமன்ற உத்தரவின் பேரில், அல்லது நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் இடம்பெறலாம். |
| 13 | கம்பனிப் பெயர் | கம்பனியின் பெயரைக் குறிப்பிடும்போது, தனியார் கம்பனி என்ற சொல் “Private Limited” என்ற வார்த்தையில் அல்லது "(Pvt) Limited” என்ற சுருக்கத்தில் முடியும். |
| 14 | கடன் செலுத்தும் சோதனை நடத்துதல் | கடன்திறன் சோதனையின்றி அனைத்து பங்குதாரர்களின் ஒப்புதலின் பேரில் பங்கிலாபத்தை வழங்கலாம். |

| | | |
|---|---|---|
| 15 | தொடர்பு பதிவேட்டைப் பராமரித்தல் | பங்குதாரர்களின் ஒருமித்த தீர்மானம், இயக்குநர்கள் குழு நிறுவனத்துடனான அதன் பரிவர்த்தனைகளை விபரிக்கும் தொடர்பு பதிவேட்டைப் பராமரிப்பதைத் தடுக்கலாம். |

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச்சேவைகள்***
***பகுதி 1 - பணத்தின் பயன்பாடு, பணம் மற்றும் வணிகத்தின் தொழிற்பாடுகள் மற்றும் நிதியியல் முறைமை***

**(a) பணத்தின் முக்கிய தொழிற்பாடுகள் - பரிமாற்ற ஊடகமாக தொழிற்படல்**:

பணமானது பெறுமதியின் பொதுவான அளவீட்டை வழங்கி, வர்த்தகத்தை எளிதாக்குவதன் மூலம் ஒரு இடைநிலை ஊடகமாக தொழிற்படுகிறது. அதன்மூலம் இது ஒரு பொருள் அல்லது சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக, பிற பொருட்கள் மற்றும் சேவைகள் மூலம் செலுத்துவது (பண்டமாற்று) போன்ற தேவையை நீக்கி, ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான பரிமாற்ற ஊடகமாக அதன் மதிப்பை அதிகரிக்கிறது.

***(02 புள்ளிகள்)***

**(b) வணிக வங்கிகளில் உள்ள கணக்குகளின் வகைகள்:**
***(போதுமான விளக்கத்துடனான இரு சரியான விடைகள் முழுமையான புள்ளிகளுக்குப் போதுமானது. ஒத்த விடைகள் கருத்திற் கொள்ளப்படலாம்.)***

(i) **நடைமுறைக் கணக்குகள்**: இது பெரும்பாலான வணிகங்கள் வணிக வங்கிகளில் பராமரிக்கும், வழக்கமான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகை கணக்கு ஆகும். இவை காசோலைகள் மூலம் பணம் செலுத்துதல் மற்றும் மீளப்பெறல் ஆகியவற்றை எளிதாக்குகின்றன. மேலும் வணிகம் வங்கியின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தவுடன் மேலதிகப்பற்று வசதிகளை அனுபவிக்க முடியும். இருப்பினும், வைப்புத்தொகைக்கு அவை வட்டி உழைப்பதில்லை.

(ii) **சேமிப்புக் கணக்குகள்**: வட்டி வருமானம் மூலம் பணத்தைச் சேமிப்பதற்காக பராமரிக்கப்படும் மிகவும் பொதுவான கணக்கு வகை இதுவாகும். வணிகம் எப்போது வேண்டுமானாலும் தனது பணத்தை மீளப்பெற முடியும் என்பதால் அவை குறுகிய கால முதலீடாகக் கருதப்படுகின்றன.

(iii) **நிலையான வைப்பு**: வெவ்வேறு வங்கிகள் மூன்று மாதங்கள் முதல் பல ஆண்டுகள் வரை பல்வேறு வகையான நிலையான வைப்புகளை வழங்குகின்றன. ஒரு நிலையான காலத்தில் அதிக வட்டி வருமானத்தைப் பெறுவதற்கான முதலீடுகளாக அவை பயன்படுத்தப்படுகின்றன. இணங்கப்பட்ட வைப்புக்காலம் முதிர்ச்சியடைவதற்கு முன்பு வணிகங்கள் பணத்தை மீளப்பெற அனுமதிக்கப்படுவதில்லை.அவ்வாறு மீளப்பெறுவதாயின் வணிகம் வட்டி வருமானத்தை இழக்க வேண்டியிருக்கும்.

(iv) **கால வைப்புக்கள்**: இந்த வைப்புக்கள் நிலையான வைப்பு கணக்கை ஒத்ததாகும். வேறுபாடு யாதெனில், திடமான முதிர்ச்சிக்காலம் காணப்படாதிருப்பதுடன், அவ்வப்போது பணத்தை வைப்பு செய்ய முடியும்.

***(04 புள்ளிகள்)***

**(c) காசுக்குப் பதிலாக காசோலைகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள்:**
***(முழுமையான புள்ளிகளைப் பெற நான்கு சரியான விடைகள் போதுமானவை. விளக்கம் அவசியமல்ல. ஒத்த விடைகள் கருத்திற் கொள்ளப்படலாம்.)***

(i) திருட்டு இடரைக் குறைக்கிறது.

(ii) பணம் செலுத்தியதற்கான எழுத்துமூல சான்றை வழங்குகிறது.

(iii) அதிக அளவு பணத்தைக் கையில் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

(iv) எதிர்கால பரிவர்த்தனைகளுக்காகப் பிற்திகதியிடப்படலாம்.

(v) வங்கிக் கூற்றுக்களுடன் கொடுப்பனவுகளை இணக்கம் செய்ய உதவுகிறது.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 05 - வணிகத்தின் மீதான அரசாங்கத்தின் செல்வாக்குகள், வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகத்தின் சமூகப் பொறுப்பு.***
***பகுதி V - வணிக நெறிமுறைகள்***
***பகுதி VI - சமூகப் பொறுப்பு***
***பகுதி VII - நிலைபேறான அபிவிருத்தி***

**(a) நெறிமுறைக் கோவையிலிருந்து ஒரு வணிக நிறுவனத்தால் எதிர்பார்க்கப்படும் நன்மைகள்:**
***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு மூன்று சரியான விடைகள் போதுமானவை. விளக்கமான விடை அவசியமற்றது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்குதலுக்காக கருத்திற் கொள்ளப்படலாம்)***

- ஊழியர்களை ஒரேசீரான நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க ஊக்குவித்தல்.
- நிறுவனத்தின் நற்பெயரை மேம்படுத்துதல்.
- தவறான நடத்தைகளைத் தடுத்தல்
- பொறுப்புக்கூறல்
- ஒழுங்குமுறைகளுடனான இணக்கப்பாடு
- நிறுவனம் குறித்த வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை உறுதி செய்தல்
- வாடிக்கையாளர்களிடையே மீண்டெழும் வணிகம் மற்றும் விசுவாசத்தை ஊக்குவித்தல்.

***(03 புள்ளிகள்)***

**(b) சமூகப் பொறுப்பை அடைவதற்கான தந்திரோபாயங்கள் அல்லது நடவடிக்கைகள்:**
***(போதுமான விளக்கத்துடன் கூடிய இரண்டு சரியான விடைகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளப் போதுமானது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்கப்படுவதற்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)***

- **அறிக்கையிடல்**: பெரும்பாலான நிறுவனங்கள் நிறுவனத்தின் தகவல்களைப் பிரசுரிப்பதுடன், பொதுமக்களை அழைக்கும்போது பல்வேறு நிதித் தகவல்களை வழங்குகின்றன. இது ஒரு சட்டப்பூர்வ தேவைப்பாடுமாகும்.
- **வெளிப்படைத்தன்மை**: கூறப்பட்டதையும் செய்ததையும் குறிப்பிட்டுக் காட்டுதல் மற்றும் ''நல்லாட்சியை'' மேற்கொள்ளல்
- **கோட்பாடுகள்**: வணிகத்தை மேற்கொள்வதற்காக மற்றும் எத்தகைய செயல்கள் செய்யப்படலாகாது என்பதைத் தீர்மானிப்பதற்கு இணங்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்பு ஒன்றினைப் பயன்படுத்துதல்.
- **குறியீடுகள்**: இது தகவலின் தரம், மற்றவர்களுக்கான மரியாதை ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும்.
- **பொறுப்புக்கூறல்**: அவர்கள் செய்யும் செயல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டிய கடமை. குறிப்பாக முகாமையாளர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களாகக் கொள்ளப்படுகிறார்கள்.
- **உறுதிப்படுத்தத்தக்கதன்மை**: தம்மை மீளாய்வு செய்வதன் மூலம் தமது செயற்பாடுகளைப் புலனாய்வு செய்யத்தக்கதாக இருத்தல்.
- **CSR இலக்குகளைத் தீர்மானித்தல்**: நிலைபேறானதன்மை, கார்பன் தடத்தைக் குறைத்தல் அல்லது பிற முயற்சிகள் போன்ற நிகழ்வுகளுக்காக CSR இலக்குகளை மையமாகக் கொண்டு தீர்மானித்தல்.

***(04 புள்ளிகள்)***

SRI LANKA

**(c) நிலைபேறானதன்மை நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள்:**
***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு மூன்று சரியான விடைகள் போதுமானவை. விளக்கமான விடை அவசியமற்றது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்குதலுக்காக கருத்திற் கொள்ளப்படலாம்)***

(i) வினைத்திறனான வளப் பயன்பாட்டின் மூலம் தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல்.

(ii) போட்டி நன்மை: சுற்றுச்சூழல் உணர்வுள்ள நுகர்வோரை ஈர்க்கும் வகையில் சந்தையில் வணிகத்தை வேறுபடுத்துதல்.

(iii) நீண்டகால நம்பகத்தன்மை: இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் வணிக தொடர்ச்சியை உறுதி செய்தல்.

(iv) மேம்படுத்தப்பட்ட பண்டக்குறி விம்பம்: நிறுவனத்தின் நற்பெயர் மற்றும் பொதுமக்களின் பார்வையில் நேர்க்கணியமாக செல்வாக்கு செலுத்துகிறது.

(v) வணிகத்தை மேற்கொள்வதற்கான சமூக ஆதரவு.

(vi) சிறந்த சமூக சூழலைக் கொண்டிருப்பது வணிகங்களுக்குத் தேவையான உள்ளீடு மற்றும் சந்தையை வழங்குகிறது.

(vii) சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதால் அரசாங்கக் கட்டுப்பாடு இல்லாதிருக்கும்.

(viii) வணிக சிநேகமான துறைகளிடையே அதிகரித்து வரும் ஒன்றுடனொன்று சார்ந்த தன்மை.

(ix) எதிர்கால அக்கறைதாரர்களை ஈர்க்கும் திறன்.

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 - வணிக நிறுவனங்களில் வர்த்தகம்***
***பகுதி VI - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி***
***அத்தியாயம் 02 - வணிகச் சூழல் மற்றும் வணிக நிறுவனங்களில் அதன் செல்வாக்கு***
***பகுதி X - வணிகச் செலவுகளில் உலகமயமாக்கலின் தாக்கம்***

**(a) வெளிநாட்டு வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய ஆவணங்கள்:**

***(போதுமான விளக்கத்துடன் கூடிய இரண்டு சரியான விடைகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளப் போதுமானது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்கப்படுவதற்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)***

1. **சுமைச்சீட்டு (வார்நாமம்)**: சர்வதேசப் போக்குவரத்து சேவை வழங்குனரால் (உதாரணமாக, ஒரு கப்பல் நிறுவனம்) பொருட்கள் ஏற்றுமதிக்காகப் பெற்றுகொள்ளப்பட்டதை உறுதிசெய்து வழங்கப்படும் ஆவணமாகும். பொருட்கள் இறக்கப்படும் துறைமுகத்தில் உரிமை கோரலுக்காக இந்த ஆவணம் அசல் வடிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. **கடன் கடிதம் (நாணயக்கடிதம்)**: ஏற்றுமதியாளர் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை நிறைவேற்றியவுடன் கொடுப்பனவைப் பெறுவதை உறுதி செய்யும் வகையில் இறக்குமதியாளரின் வங்கியிடமிருந்து வழங்கப்படும் ஒரு உத்தரவாதம்.

3. **வர்த்தக விலைப்பட்டியல்**: விற்கப்பட்ட பொருட்கள் மற்றும் செலுத்த வேண்டிய தொகையை விபரித்து ஏற்றுமதியாளரால் வழங்கப்படும் ஒரு ஆவணம். இது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலை மற்றும் காப்புறுதி மற்றும் கப்பற்கேள்வு போன்ற பிற கட்டணங்கள், பணம் செலுத்தும் முறை, நாணயம் மற்றும் இறக்குமதியாளருக்கும் ஏற்றுமதியாளருக்கும் இடையிலான பரிவர்த்தனைக்கு தேவையான பிற விபரங்களை உள்ளடக்கும்.

4. **விபரக்குறிப்பு விலைப்பட்டியல்:** இறக்குமதியாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய பொருட்களைப் பற்றிய தகவல் வழங்கல். இந்த விளக்கத்தில் பொருட்களின் விலை, அளவு, போக்குவரத்து வகை, கேள்வுச் செலவு மற்றும் விநியோக வகை, காப்புறுதி மற்றும் ஏற்றப்பட்ட திகதி, பொருளின் எடை, பொதியிடல் வகைகள், பெட்டிகளின் எண்ணிக்கை, சலுகை விலை மற்றும் செல்லுபடியாகும் திகதி போன்ற தகவல்கள் உள்ளடங்கி இருக்கும்.

aat SRI LANKA

5. **தோற்றுவாய் சான்றிதழ் (உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்)**- வர்த்தகம் செய்யப்படும் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டினை உறுதி செய்யும் ஆவணம். ஒப்பந்தம் மற்றும் கட்டணத் தேவைகளின் ஒரு பகுதியாக இது தேவைப்படலாம்.

6. **காப்புறுதிச் சான்றிதழ்** - சர்வதேச எல்லை வழியாக கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு போதுமான காப்புறுதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை உறுதிசெய்யும் ஆவணம்.

7. **இழப்பீட்டுக் கடிதம்** - அனுப்பப்பட்ட பொருட்களுக்கு ஏற்படக்கூடிய எந்தவொரு சேதத்திற்கும் ஏற்றுமதியாளர் முழு இடரையும் ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தி, அதன் பிரகாரம் கப்பல் நிறுவனம் ஒரு சுத்தமான சுமைச்சீட்டை வழங்கும்படியான ஆவணம்.

8. **சுகாதாரச் சான்றிதழ்கள்** - சில பொருட்களுக்கு ஏற்றுமதியாளர் நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பிலிருந்து பொருட்களின் நிலையை உறுதிப்படுத்தும் வகையிலான அனுமதி தேவைப்படலாம்.

***(03 புள்ளிகள்)***

**(b) இலங்கையின் பாரம்பரிய வர்த்தக நடவடிக்கைகளில் புதிய போக்குகள்:**
***(போதுமான விளக்கத்துடனான இரு சரியான விடைகள் முழுமையான புள்ளிகளுக்குப் போதுமானது. ஒத்த விடைகள் கருத்திற் கொள்ளப்படலாம்.)***

1. **இலத்திரனியல் வணிக ஒருங்கிணைப்பு**: பொருட்களைக் கொள்வனவு மற்றும் விற்பனை செய்வதற்கு இணையவழித் தளங்களைப் பயன்படுத்தல். இது உள்நாட்டு வணிகங்களுக்கு விரிவாக்கப்பட்ட சந்தையை வழங்குவதுடன் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை வழங்கும்.
2. **எண்ணியல் கொடுப்பனவு முறைகள்**: பாதுகாப்பு மற்றும் விரைந்த பரிவர்த்தனைகளுக்கு இலத்திரனியல் கட்டண முறைகளைப் பயன்படுத்தல் குறைந்த இடர் மற்றும் முயற்சியுடன் பரிவர்த்தனைகளின் தெளிவான ஆவணங்களை மேம்படுத்தும்.
3. **இருப்புக்கையாளல் தொழிநுட்பம்**: வினைத்திறனான வழங்கல் சங்கிலி முகாமைக்கான மேம்பட்ட இருப்புக் கையாளல் தீர்வுகளைப் பயன்படுத்துதல். இது செலவு மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டை அதிகரிப்பதுடன், விரைவான விநியோகங்களுக்கு வழிவகுத்து, உத்வேகமான முதன்மைக்காலத்தை ஏற்படுத்தி, இருப்பு இடர்களைக் குறைக்கும்.
4. **தொழிநுட்ப நோக்குநிலை**: பெரும்பாலான நிறுவனங்கள் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக புதிய கருவிகள், இயந்திரங்கள் அல்லது மென்பொருளை சார்ந்துள்ளன. தங்கள் வேலையில் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவது விடயங்களை விரைவாகவும், எளிதாகவும், வினைத்திறனாகவும் மேற்கொள்ள உதவுகிறது.
5. **ஒரே கூரையின் கீழான தீர்வு**: ஒரே நிறுவனத்திலிருந்து வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான சேவைகளை வழங்குதல்.

aat SRI LANKA

6. **நீட்டிக்கப்பட்ட வணிக நேரம்**: நீட்டிக்கப்பட்ட வணிக நேரம் புதிய மற்றும் மீளவரும் வாடிக்கையாளர்களுடன் விற்பனையை அதிகரிக்க வாய்ப்பளிப்பதுடன், மேலும் சில நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் 24 மணிநேரமும் திறந்திருக்கும்.
7. **மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவைகள்**: வாடிக்கையாளர் சேவை மேம்பாடு என்பது வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் சேவையின் அம்சங்களை மேம்படுத்துவதை உள்ளடக்கியது, இது திருப்தி, விசுவாசம் மற்றும் தக்கவைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. போட்டித்தன்மையை எதிர்கொள்ள விரும்பும் மற்றும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நேர்க்கணிய அனுபவங்களை உறுதிசெய்ய விரும்பும் வணிகங்களுக்கு இம்முன்னேற்றம் முக்கியம்.
8. **விரிவாக்கப்பட்ட சந்தைகள்**: நாட்டில் அதிகமான வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைப்பனவை உறுதி செய்யும். வணிகம் தங்கள் கிளைகளை விரிவுபடுத்தலாம்.

***(04 புள்ளிகள்)***

**(c) இலத்திரனியல் வணிகத்தைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள்:**
***(முழுமையான புள்ளிகளைப் பெற நான்கு சரியான விடைகள் போதுமானவை. விளக்கம் அவசியமல்ல. ஒத்த விடைகள் கருத்திற் கொள்ளப்படலாம்.)***

1. எந்த நேரத்திலும் எங்கிருந்தும் கொள்வனவு செய்யும் இயலுமை.
2. பரந்த அளவிலான உற்பத்தி மற்றும் சேவைகளுக்கான அணுகல்.
3. வெவ்வேறு விற்பனையாளர்களிடமிருந்து விலைகளை எளிதாக ஒப்பிட முடியும்.
4. வாடிக்கையாளரின் வீட்டு வாசலில் நேரடியாக பொருட்கள் விநியோகிக்கப்படலாம்.
5. கட்டளையிடல் எளிதானது.
6. பணம் மீளப்பெறும் அவசியமில்லை, இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்த முடியும்.
7. புதிய உற்பத்திகளைப் பயன்படுத்த வாடிக்கையாளர் நேரம் மற்றும் முயற்சியை மீதப்படுத்தல்.
8. குறைந்த விலைகள்

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***பிரிவு B முடிவு***

aat SRI LANKA

(*மொத்தம் 20 புள்ளிகள்*) **பிரிவு C**

***வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

| |
|---|
| ***அத்தியாயம் 01 - வணிக நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய எண்ணக்கருக்கள்*** <br> ***பகுதி V - வணிக அமைப்புக்களுக்கான அறிமுகம்*** <br> ***அத்தியாயம் 02 - வணிக சூழல் மற்றும் வணிக அமைப்பில் அதன் செல்வாக்கு*** <br> ***பகுதி V - வணிக சூழல் பகுப்பாய்வு*** <br> ***அத்தியாயம் 03 – வணிகத் துணைச் சேவைகள்*** <br> ***பகுதி VI - போக்குவரத்து*** <br> ***அத்தியாயம் 07 – முயற்சியாண்மையின் பங்களிப்பு*** <br> ***பகுதி II – முயற்சியாளரின் பண்புகள்*** |

**(a) ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனியின் மூன்று நன்மைகள்:**

***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு மூன்று சரியான விடைகள் போதுமானவை. விளக்கமான விடை அவசியமற்றது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்குதலுக்காக கருத்திற் கொள்ளப்படலாம்)***

1. பொதுமக்களுக்கு பங்குகளை வழங்குவதன் மூலமான மூலதனத்துக்கான அணுகல்.
2. மேம்படுத்தப்பட்ட நம்பகத்தன்மை மூலம் கடன்களைப் பெறுவதை எளிதாக்குதல், முதலீட்டாளர்களை ஈர்த்தல் மற்றும் வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குனர் மத்தியில் நம்பிக்கையை வளர்த்தல்.
3. வரையறுக்கப்பட்ட பொறுப்பு, பங்குதாரர்கள் தங்கள் தனிப்பட்ட சொத்துக்களை வணிகக் கடன்களிலிருந்து பாதுகாக்கும்.
4. பல தொழில்களை நோக்கி அதிக முதலீடு மற்றும் சந்தை பரவலுடன், வணிகத் திறனை மேம்படுத்தும் இயலுமை.
5. தொடர்ந்தியங்கும் இயலுமை.
6. தனியான சட்ட ஆளுமை.
7. கடன் மூலதனத்தைப் பெறுவது எளிது / பகிரங்கமாக தொகுதிக் கடன் பத்திரங்களை வழங்கமுடியும்.
8. பங்குகள் சுயாதீனமாகக் கைமாற்றத்தக்கவை.
9. பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்படலாம்.
10. பாரிய அளவிலான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் அளவீட்டு சிக்கனங்களை அடைய முடியும்.
11. முகாமையானது இயக்குனர் சபையினால் மேற்கொள்ளப்படுவதால், முகாமை வினைத்திறனாகவிருக்கும்.
12. வணிகம் செய்ய / உயர் மட்ட மனித வளங்களைத் திரட்ட அதிக சம்பளத்தில் திறமையான முகாமையாளர்களை நியமிக்க முடியும்.
13. அதிகரித்த திரவத்தன்மை.
14. பல்வேறு வரி சலுகைகள்.
15. முதலீட்டாளர்களை ஈர்ப்பது எளிது.

***(03 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(b)** ஏரியல் டெக்ஸ்டைல்ஸ் வணிகத்தின் SWOT பகுப்பாய்வு:
***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு, போதுமான காரணிகளுடன் இதேபோன்ற மதிப்பீடு போதுமானது. அட்டவணை வடிவம் மற்றும் விளக்கப்படுத்தல் அவசியமில்லை)***

| **பலங்கள்:** | | **பலவீனங்கள்:** |
|---|---|---|
| ○ நன்கு நிறுவப்பட்ட வழங்குனர் உறவுமுறைகள்<br>○ திறன்மிக்க ஊழியப்படை.<br>○ இலங்கையில் வலுவான வாடிக்கையாளர் தளம்.<br>○ தற்போதுள்ள உற்பத்தி வசதிகள் (நான்கு தொழிற்சாலைகள்).<br>○ விரைவானத் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையாளராக இருத்தல். | | ○ வரையறுக்கப்பட்ட நிதி வளங்கள்.<br>○ ஒரு சில முக்கிய வாடிக்கையாளர்களில் அதிகம் தங்கியிருத்தல்<br>○ தகவல் தொழிநுட்ப அறிவுப் பற்றாக்குறை |
| **வாய்ப்புகள்:** | | **அச்சுறுத்தல்கள்:** |
| ○ ஐரோப்பிய நாடுகளிலான பெண்கள் ஆடைகளுக்கான அதிகரித்த கேள்வி.<br>○ பிற ஆடை உற்பத்திகள் நோக்கிய பன்முகப்படுத்தலுக்கான சாத்தியம்.<br>○ நிலைபேறான செயன்முறைகளுக்கான வளர்ந்து வரும் உலகளாவிய முக்கியத்துவம்.<br>○ மேம்பட்ட செயற்பாடுகள் மற்றும் சந்தை அணுகலுக்காக தகவல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு. | | ○ அந்நிய செலாவணியின் எதிர்மறையான விளைவுகள்<br>○ உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து அதிகரித்து வரும் போட்டி.<br>○ நவநாகரிகப் போக்குகளிலான மாற்றங்கள்.<br>○ வழங்கல் சங்கிலி சீர்குலைவுகள் (இயற்கை பேரழிவுகள், அரசியல் உறுதியற்ற தன்மை, வர்த்தக கட்டுப்பாடுகள், தொழிலாளர் பற்றாக்குறை).<br>○ பொருளாதார மந்தநிலை காரணமாக குறைக்கப்பட்ட நுகர்வோர் செலவு.<br>○ நாணயப் பெறுமதி வீழ்ச்சி காரணமாக அதிகரித்த உற்பத்திக் கிரயம்.<br>○ இலங்கையில் பொருளாதார மந்தநிலைக்கு பாதிப்பு.<br>○ ஆடைகளுக்கான வாடிக்கையாளர் செலவு வீழ்ச்சி.<br>○ இயற்கை பேரழிவுகள்<br>○ ரூபாய் வர்த்தகக் கட்டுப்பாடு |

***(06 புள்ளிகள்)***

**(c) போக்குவரத்து முறையைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய மூன்று முக்கியமான காரணிகள்:**

***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு மூன்று சரியான விடைகள் போதுமானவை. விளக்கமான விடை அவசியமற்றது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்குதலுக்காக கருத்திற் கொள்ளப்படலாம்)***

1. **கிரயம் -** கேள்வுக் கட்டணங்கள், எரிபொருள் செலவுகள் மற்றும் மேலதிகக் கட்டணங்கள் உள்ளடங்கலாக
2. **வேகம் -** பொருட்களின் தன்மை, அவசரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில்.
3. **நம்பகத்தன்மை** - விநியோக நேரம், நற்பெயர் மற்றும் முந்தைய அனுபவங்களின் அடிப்படையில்
4. **தூரம்** - பொருட்களின் தோற்ற இடத்திலிருந்து விநியோக இடத்திற்கு.
5. **கிடைப்பனவுத் தன்மை** - கப்பலின் தன்மை, தேவையான திறன் மற்றும் கொண்டு செல்ல வேண்டிய அளவு ஆகியவற்றின் அடிப்படையில்.
6. பாதுகாப்பு
7. இயலளவு
8. நியமங்கள் மற்றும் சர்வதேச விதிமுறைகள்
9. சட்டபூர்வமான தன்மை

***(03 புள்ளிகள்)***

**(d) சிறந்த போக்குவரத்து முறைமை ஏரியல் டெக்ஸ்டைல்ஸ் வணிகத்துக்கு உதவியளிக்கத்தக்க மூன்று வழிகள்:**

***(போதுமான விளக்கத்துடன் கூடிய மூன்று சரியான விடைகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளப் போதுமானது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்கப்படுவதற்காகக் கருத்திற் கொள்ளப்படலாம்)***

1. **சந்தை விரிவாக்கம்**: ஒரு நம்பகமான போக்குவரத்து முறைமை ஏரியல் டெக்ஸ்டைல்ஸ் புதிய சந்தைகளை, குறிப்பாக ஐரோப்பாவில் அடைய உதவும். சந்தைப் பங்கைக் கைப்பற்றவும் உலகளாவிய இருப்பை உருவாக்கவும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை சரியான நேரத்தில் வழங்குவது அவசியமானதாகும்.
2. **செலவுக் குறைப்பு**: வினைத்திறனான போக்குவரத்து இருப்புக் கையாளல் தொடர்புடைய செலவுகளைக் குறைக்க உதவலாம். உகந்த போக்குவரத்து வழிகள், ஒருங்கிணைந்த ஏற்றுமதிகள் மற்றும் பேரம்பேசப்பட்ட கேள்வுக் கட்டணங்கள் கணிசமான சேமிப்பிற்கு பங்களிக்கும்.
3. **மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் திருப்தி**: ஒரு சிறந்த போக்குவரத்து முறைமையானது உற்பத்திகளை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வதன் மூலம், வாடிக்கையாளர் திருப்தி மற்றும் விசுவாசத்தை அதிகரிக்கும். வாடிக்கையாளர்களது நம்பிக்கையை

வளர்ப்பதற்கு, குறிப்பாக போட்டித்தன்மை வாய்ந்த ஆடைத் துறையில், விநியோகக் காலக்கெடுவை சந்திப்பது மிக முக்கியமானதாகும்.

4. **போட்டி நன்மை**: ஏரியல் டெக்ஸ்டைல்ஸ் அதன் போட்டியாளர்களை விட சிறந்த போக்குவரத்து முறைமை ஒன்றைப் பெற முடிந்தால், போட்டி நன்மையை அனுபவிக்கலாம். உலகளாவிய ரீதியில் வர்த்தகம் செய்யும்போது, இது முதன்மைக் காலங்களைக் குறைக்கவும், இருப்புப் புரள்வை மேம்படுத்தவும், வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை அதிகரிக்கவும் உதவும்.

5. **பேரளவு உற்பத்திக்கு வழிவகுப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரித்தல்**: ஆடை இருப்புப் போக்குவரத்து என்பது ஆடை உற்பத்திகள் மற்றும் பொருட்களை கையாளுதல், கொண்டு செல்லல் மற்றும் களஞ்சியப்படுத்தலை உள்ளடக்கிய ஒரு சிக்கலான செயன்முறையாகும். சிறந்த போக்குவரத்து முறைமையானது உற்பத்தியை வினைத்திறனாகவும் பயனுறுதி மிக்க வகையிலும் மேற்கொள்ள உதவும்.

6. **பொருட்களை சரியான நேரத்தில் விநியோகித்தல்**: பொருட்களை விநியோகிக்க எடுக்கும் நேரமானது விநியோக சேவை, தூரம் மற்றும் அடைவிட நாடு உள்ளிட்ட பல காரணிகளை சார்ந்ததாகும். இருப்பினும், ஒரு சிறந்த போக்குவரத்து முறைமையுடன் பொருட்களை சரியான நேரத்தில் விநியோகம் செய்ய முடியும்.

7. **குறைந்த விலையில் உயர்தரமான பொருட்கள்**: பொருட்கள் பாதுகாப்பாக பொதி செய்யப்படுவதையும், வாடிக்கையாளருக்கு நல்ல தரத்தில் பொருட்களை வழங்குவதையும் உறுதி செய்தல். மேலும், போக்குவரத்தில் குறைந்த செலவு காரணமாக, வாடிக்கையாளர் குறைந்த விலையில் நல்ல தரமான பொருட்களைப் பெற முடியும்.

8. **ஊழியர்களை சரியான நேரத்தில் சென்றடைதல்**: பெரும்பாலான ஆடை நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை கொண்டு செல்ல போக்குவரத்து வசதியை ஏற்படுத்தியுள்ளன. எனவே, நிறுவனம் ஊழியர்களை தங்கள் தொழிற்சாலைகளுக்கு சரியான நேரத்தில் அழைத்து வரும் நிலையில் உள்ளது.

9. **உற்பத்திப் பொருட்களை சரியான நேரத்தில் தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லல்:** பொருட்களின் தரத்தை பராமரிப்பதில் கவனம் செலுத்தும் அதே வேளையில், நிறுவனம் குறைந்த விலையில் வேகமான போக்குவரத்து முறையைப் பயன்படுத்தலாம். இது பொருட்கள் தொழிற்சாலைக்கு சரியான நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்யும்.

***(05 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(e) ஏரியல் வணிகத்துக்குத் தேவையான மூன்று முயற்சியாண்மைத் திறன்கள்:**

***(முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு மூன்று சரியான விடைகள் போதுமானவை. விளக்கமான விடை அவசியமற்றது. இதனை ஒத்த விடைகள் புள்ளி வழங்குதலுக்காக கருத்திற் கொள்ளப்படலாம்)***

1. தலைமைத்துவ திறன்கள்
2. ஆள்சார் திறன்கள்
3. தொடர்பாடல் திறன்கள்
4. அடிப்படை முகாமைத் திறன்கள்
5. நிதி முகாமைத் திறன்கள்
6. தந்திரோபாயத் திட்டமிடல் திறன்கள்
7. மாற்றியமைக்கும் மற்றும் புத்தாக்கத் திறன்கள்
8. இடர் முகாமை திறன்கள்
9. மாற்ற முகாமை திறன்கள்

*(05 புள்ளிகள்)*
*(மொத்தம் 20 புள்ளிகள்)*

SRI LANKA

***பிரிவு C இன் முடிவு***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the “Only” answers, or, for that matter even as “Model Answers”. The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*